**பாராளுமன்ற புலமைப்பரிசில் சபை - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, பாராளுமன்ற புலமைப்பரிசில் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளை பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர பாராளுமன்ற புலமைப்பரிசில் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்கியொழுகாமை

பின்வரும் இணங்கியொழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க பாராளுமன்றப் புலமைப்பரிசில் சபை அதிகாரச் சட்டம் | |
| (i) 3 ஆம் பிரிவு | கல்வி, ஆராய்ச்சி, ஆலோசனை சேவைகள் மற்றும் ஏனைய கல்விசார் நடவடிக்கைகளுக்காக |

நிதி வழங்கல் மற்றும் இலங்கை பிரசைகளுக்கு வெளிநாட்டு உயர் கல்வி நிறுவகங்களுக்குச் செல்வதற்காகவும் வெளிநாட்டு பிரசைகளுக்கு இலங்கையில் உயர் கல்வி நிறுவகங்களில் கல்விபயில்வதற்காகவும் வசதிகள் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது கல்வி முன்னேற்றத்திற்காக செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பாராளுமன்ற புலமைப்பரிசில் சபை தற்போது செயற்படாததனால் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் காணப்படும் நோக்கங்களை மேற்கொள்வதற்கு இயலாதுள்ளதாக செயலாளர் அறிவித்திருந்தார்.

(ii) 5 ஆம் பிரிவு

பாராளுமன்ற புலமைப்பரிசில் சபை கட்டுப்பாட்டுச் சபை ஒன்றை நியமித்திருக்கவில்லை. இது தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் படி அரசியல் யாப்புச் சபையின் பரிந்துரையில் சபாநாயகர் அவர்கள் புலமைப்பரிசில் சபைக்கு பெயரிடக்கூடிய வகையில் அதிகாரச்சட்டம் திருத்தப்படுவதற்கு பாராளுமன்ற சபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக 2011 மே 23 ஆம் திகதிய கடிதத்தில் செயலாளர் அறிவித்திருந்தார்.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

செயற்திறன் அறிக்கையும் செயற்பாட்டுத்திட்டமும் தயாரிக்கப்பட்டிராததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. பாராளுமன்ற புலமைப்பரிசில் சபை தற்போது செயற்படாமையால் இவ் விடயத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக பாராளுமன்ற புலமைப்பரிசில் சபைச் செயலாளர் அறிவித்திருந்தார்.

| | | |
|---|---|---|
| (இ) | 2007 திசெம்பர் 18 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. பீஈடீ /47 | கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனைத் தயாரிப்பதற்கான பொறுப்பு பாராளுமன்ற புலமைப்பரிசில் சபைக்குரித்தானமையால் தற்போது கூட்டுத்திட்டம் தயாரிக்க முடியாது என புலமைப்பரிசில் சபையின் செயலாளர் அறிவித்திருந்தார். |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,026,711 செலவினத்திற்கும் மேலான வருமான மிகையில் விளைந்திருந்த அதேவேளை இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமான மிகை ரூபா 632,099 உடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 394,612 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டில் அரசாங்க மானியம் ரூபா 1,000,000 ஆல் அதிகரித்தமையும், வாகனப் பராமரிப்பு, காரியாலய உபகரணங்களின் பராமரிப்பு, தபால் செலவினங்கள் மற்றும் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அன்பளிப்புக்கள் முதலிய செலவினங்கள் ரூபா 81,223 ஆல் குறைவடைந்தமையும் இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

#### 2.1.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவகத்தின் ஐந்து பேரைக்கொண்ட பதவியணியினருக்கு 2010 ஆம் ஆண்டிற்கு ரூபா 1,164,629 தொகையான சம்பளங்களும் படிப்பணங்களும் செலுத்தப்பட்டிருந்ததுடன் இவர்களில் நான்கு பேருக்கு மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட நியமனக் கடிதங்கள் இருக்கவில்லை.

**2.2 செயற்பாட்டு மீளாய்வு**

-----------------------------------

**2.2.1 செயலாற்றல்**

----------------------

மீளாய்வாண்டின் போது எந்த ஒரு புலமைப்பரிசிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-------------------------------------------------------

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பதவியணி சம்பளங்களும் படிப்பணங்களும்

(ஆ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள்